**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.548/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-9 |
| Name | : | மாரியப்பன், வயது 64 |
| Father Name/Husband Name | : | முத்தையா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பேப்பர் போடும் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of August 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து பேப்பர் போடும் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலத்தில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 09.02.2022 ஆம் தேதி பழைய நகராட்சி அருகே வைத்து எதிரி ரூபாய் மோசடி செய்ததாக முதலாளி புகார் கொடுத்தன் பேரில் எதிரியை போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் தற்செயலாக வந்தேன். ஆனந்தராஜீம் வந்தார்.
2. போலிசார் எதிரியை விசாரித்து ரிப்போட் எழுதிக் கொண்டிருந்தார்கள் அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் கையொப்பம் செய்த பின்னர் உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ன் வீட்டின் பக்கத்தில் தான் குடியிருக்கிறீர்கள் என்றால் சரிதான். போலிசார் உங்களை விசாரிக்கும் போது நீங்கள் கூலி வேலை பார்ப்பதாக சொல்லியுள்ளீர்கள் என்றாலும் பேப்பர் போடுவதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.
2. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன வழக்கிற்காக கையொப்பம் கேட்டார்கள் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டிருந்தன என்பது பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் ரூபாய் மோசடி செய்த

வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள். எத்தனை பக்கங்கள் என்று தெரியவில்லை.

3. என்ன தேதி கையொப்பம் செய்தீர்கள் என்றால் 09 ஆம் தேதி. நீங்கள் கையொப்பம் செய்த போது அதில் தேதி குறிப்பிட்டீர்களா என்றால் இல்லை. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரை போலிசார் எழுதினார்கள் என்றால் சரிதான்
4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் நீங்கள் அதில் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நீங்கள் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு அ.சா.1 உங்கள் பக்கத்து வீடு என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.